**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | **CC . 21/2014** |
| **Miscellaneous** | : | |
| **Summary Trial** | : | |
| **Maintenance** | : | |
| **Deposition of witness for prosecution** | : | **PW.9.** பிரபு |
| **Fathers Name/Husband Name** | : | பால்அய்யர் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.12.2021

மு.வி: நான் தற்போது நல்லுத்தேவன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் காண்ட்ராக்ட் தொழில் செய்துவருகிறேன். அசா4ஐ எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு நல்லத்தேவன்பட்டியிலிருந்து வந்துகொண்டுருந்தபோது சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்தில் காவல்ஆய்வாளர் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு நானும் அசா4ம் இருந்தபோது விசாரித்து அதற்கு சாட்சியாக என்னிடமும் அசா4யிடமும் கையொப்பம் வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

விபத்துகுள்ளானவர்கள் உங்கள் ஊரைச்சார்ந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து உங்கள் ஊர் இரண்டு கீலோமீட்டர் தள்ளி

உள்ளது என்று சொன்னால் 1-1/2 கிலோமீட்டர் தள்ளி உள்ளது. சம்பவயிடம் உசிலம்பட்டி- பேரையூர் வழியே வாகனங்கள் செல்லும் பிராதான பாதை என்று சொன்னால் சரிதான். சம்பவநேரத்தில் சாலை இருபுறமும் வீடு மற்றும் கடைகள் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் நல்லுத்தேவன்பட்டியிலிருந்து வரும்போது போலீசார் உங்களை அழைத்தார்களா என்றால் கூட்டத்தை பார்த்து நான் நிறுத்தினேன். எவ்வளவு ஆட்கள் அப்போது அங்கிருந்தார்கள் என்றால் பத்து பேர்கள் இருப்பார்கள். மேற்படி பத்துபேர் எந்த ஊார்காரர்கள்என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அசா4 மொக்கப்பாண்டி தனியாக வந்தாரா என்றால் என்னுடன் தான் வந்தார். சம்பவயிடத்தில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்று சொன்னால் சுமார் பத்து நிமிடம் இருந்திருப்பேன். காவல் ஆய்வாளர் விபத்துக்குள்ளான நபர்கள் உங்கள் ஊர்க்கரர்கள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து செய்தீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள் எத்தனை கையெழுத்து போட்டீர்கள் என்று சொன்னால் ஒரு கையெழுத்து போட்டேன். நீங்கள் கையெழுத்து போட்ட பேப்பரில் படம் வரைந்திருந்ததா என்றால் படம் வரைந்திருந்தது.

ம.வி.இல்லை.

S.d./ Prabhu
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. R.M.Marimuthu
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.